**தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை– 2017**

---

தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள், கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 20(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அறிக்கைகள் தாமதம் காரணமாக அதிகாரசபை தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை 2020 யூலை 24 ஆம் திகதி மும்மொழிகளிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நிதிச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கிண்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000–1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி, அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கையின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3)ஆம் மற்றும் (4)ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன.

### 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினை ஒப்பீடப்பட்டிருந்தது. அதற்கமைய நிதிக் கூற்றுக்களில் காணப்படும் அனைத்து தகவல்களின் அடிப்படையில் எனது அறிக்கை பாதகமானதாக காணபடுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர நிதிக்கூற்றுக்களானவை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் டிதிகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான நிலைப்பாட்டை பிரதிபலிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய இணங்காமை

**(அ) இ.க.நி 01: நிதி நிலைமைக் கூற்றுக்களை தயாரித்தல்**

நியமங்களுக்கமைய, இ.க.நி 08 இல் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் கடந்தகாலத்தில் தீர்மானிக்கப்பட்ட மீள் வெளிப்பாட்டின் விளைவுகளை இனங்கண்டு, தொடர்புடைய ஒவ்வொரு கூறுகளையும் உள்ளடக்கி எல்லாக்கூறுகளின் மாற்றங்கள் தொடர்பாக தயாரித்து வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா மாற்றங்களையும் உள்ளடக்கி முன்னைய வருடத்தில் சரிசெய்யப்பட வேண்டிவைகளின் தேறிய வேறுபாடு மட்டுமே சரிசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

**(ஆ) இ.க.நி 16: ஆதனம், பொறி, இயந்திர உபகரணம்**

(i) ஒவ்வொரு வருட இறுதியிலும் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்தன. மேலும், முன்னைய மதிப்பீடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நிபந்தனைகள் வேறுபட்டால் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டில் மாற்றம் ஏற்பட்டதாகக் கணக்கிடப்பட வேண்டும். இருப்பினும், 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிகரப்பெறுமதி ரூபா.10,097,481 இல் தற்போது பயன்பாட்டிலுள்ள இயந்திரங்கள், மோட்டார் கார், காரியாலய உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள், நூலகப் புத்தகங்கள், கணக்கீட்டு கணனி மென்பொருட்கள் மற்றும் கணனிகள் போன்றவற்றின் எஞ்சிய பெறுமதி மற்றும் ஆயட்காலம் தொடர்பாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் இற்றை வரை பயன்படுத்தப்படாத ஒரு மோட்டார் கார், 24 அலுவலக உபகரணங்கள் மற்றும் 49 கணினிகள் மற்றும் பாகங்கள் ஆகியவை நிதிநிலைமைக் கூற்றில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) (i) அன்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் அதிகாரசபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா. 46,450,000 ஒதுக்கீட்டில் ரூபா.46,432,687 பெறுமதி செலவில் மீளாய்வாண்டில் மாகந்துரா கைத்தொழிற்பேட்டையில் முன் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற மையமொன்று அமைக்கப்பட்டிருந்தன. அந்த மையம் ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் 60 சதவீத பங்குகளை அதிகாரசபையே கொண்டிருந்தது. மேற்படி ஒதுக்கீட்டில், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட முதலீடாக ரூபா.46,432,687 பெறுமதி மையத்தை நிர்மாணிப்பதற்காக அதிகார சபையால் செலவிடப்பட்டது, எனினும் நிறுவனம் அந்த அதிகாரசபைக்கு தேறிய பெறுமதிக்கான பங்குகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, நிதிக் கூற்றில் அப்பெறுமதியினால் முதலீடுகள் கூட்டிக்காட்டப்பட்டிருந்தன.

(ii) அதிகார சபையால் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேற்குறிப்பிட்ட துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களையும் ஒருங்கிணைத்து அதிகாரசபையினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்காமையினால், மீளாய்வாண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திட்டங்களுக்காக மானியக் கணக்கிற்கு முன்னைய ஆண்டில் செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 19,633,940 ஆன பெறுமதியினை ஒப்பிடுவதற்குப் பதிலாக, நிதிக் கூற்றுக்களில் திரண்ட மிகை மற்றும் மானியக் கணக்கின் நிலுவைகளை ஒப்பிட்டு சீர்செய்ததன் காரணமாக ஒட்டு மொத்த திரண்ட மிகை பெறுமதியானது அப்பெறுமதியினை விட குறைவாக காணப்பட்டிருந்தது. திட்டத்திற்கான மானிய கணக்கு மீதி நிதிக் கூற்றுக்களில் அத்தொகையினால் அதிகமாக காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட காப்புறுதி கட்டணப் பெறுமதி ரூபா.92,620 ஆக இருந்த போதிலும், இது மீளாய்வாண்டில் ரூபா.63,916 என கணக்கிடப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான காப்புறுதிச் செலவு ரூபா.28,704 இனால் அதிகரித்தும் மற்றும் காப்புறுதிக் கட்டண முற்பணத் தொகை நிதிநிலைமைக் கூற்றில் அத் தொகையை விட குறைவாகவும் காணப்பட்டன.

(ஈ) மீள்வாண்டிற்காக கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்களின் பெறுமானத்தேய்வு ரூபா.445,042 பெறுமதியாக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு ரூபா. 290,823 பெறுமதியாக கணக்கிடப்பட்டதன் காரணமாக நிதிநிலைமை கூற்றில் ரூபா.154,219 பெறுமதியினால் குறைந்துக் காட்டப்பட்டிருந்தன.

(உ) வாடகை கட்டடத்தில் இயங்குகின்ற அதிகாரசபையின் அலுவலக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு மற்றும் திருத்தங்களுக்காக 2014 ஆம் ஆண்டு மற்றும் 2016 முறையே ரூபா. 1,280,282 மற்றும் ரூபா. 56,250 பெறுமதியான பராமரிப்புக் கிரயங்கள செலவினக்கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், இயந்திரத்திற்கான மூலதனமாக்கப்பட்ட மற்றும் தேய்மானத்திற்காக ரூபா. 590,892 பெறுமதியானது ஒதுக்கப்பட்டிருந்தது. இதனால் மீளய்வாண்டு இறுதியிலுள்ள நிலையான சொத்துக்களின் மீதி ரூபா. 745,640 பெறுமதியினால் அதிகரித்திருந்தன.

(ஊ) காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றுக்கும் மற்றும் கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றுக்குமிடையில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

| | **சபையினால் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றின் படி** | **கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றின் படி** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| தொழிற்பாட்டு செயற்பாடுகள் | 28,288,562 | (112,503,769) | (140,792,331) |
| மூலதனச் செயற்பாடுகள் | (47,615,766) | (29,228,098) | 18,387,668 |
| நிதிச் செயற்பாடுகள் | 3,136,805 | 125,541,469 | 122,404,664 |

(ii) மீளாய்வாண்டில் தொழிற்பாட்டு செயற்பாட்டின் மிகை ரூபா.19,633,940 பெறுமதியானது இவ்வாண்டில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) தாமதக்கட்டணமான ரூபா. 28,045,019 பெறுமதியானது ஏனைய வருமானத்தில் உள்ளடக்கப்பட்டதினால் தொழிற்பாட்டு செயற்பாட்டின் மிகையானது இணங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) திட்டங்களுக்கு பெறப்பட்ட நிதி மானியங்கள் நிதி நடவடிக்கைகளின் கீழ் காட்டப்படாமல், தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(v) ஒப்பந்தத்திற்கான பொறுப்பு ரூபா.4,326,007 இனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. ஆனால் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா. 15,921,026 பெறுமதியாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

(vi) சி/சவீ – மீளாய்வாண்டில் எக்ஸ்பிரஸ் செய்த முதலீடுகளுக்கும் முன்னைய ஆண்டில் செய்யப்பட்ட முதலீடுகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் ரூபா.28,045,019 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா. 46,432,687 ஆக காட்டப்பட்டிருந்தன.

(vii) மீளாய்வாண்டில் பெறப்பட்ட மொத்த மானிய பெறுமதி ரூபா. 163,173,110 அதில் மானியப் பயன்பாடு ரூபா. 37,631,641 ஆனால் காசுப்பாய்ச்சல் கூற்றின் நிதி நடவடிக்கையின் கீழ் ரூபா. 3,136,805 மட்டுமே பதிவு செய்யப்பட்டன.

### 2.2.3 கட்டுப்பாட்டு கணக்குகள் இணங்காமை

மீளாய்வாண்டில் ஒவ்வொரு மாத இறுதியிலும் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக்கூற்று மீதியானது காசுப்புத்தக வங்கி மீதியுடன் இணங்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆம் ஆண்டில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா.27,372,346 இனால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் மிகையாக ரூபா. 18,004,593 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,367,753 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் தொழில்துறை அமைச்சின் கீழ் ஒரு திட்டத்திற்காக பெறப்பட்ட மானிய வருமானம் ரூபா. 9,657,351 பெறுமதியாக பெறப்பட்டமையினால் இலாப அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளிக்கப்பட்டிருந்தன.

### 3.2 நிதிக் கூற்றுகள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆம் திகதி பிஈடீ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு அறிக்கை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 21 ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 3.3 முன்னைய ஆண்டிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.